சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

OS. No. 88/2015

பெயர் திரு. கார்த்திகேயன் த/பெ. ஜானகிராமன் நாள். 07.10.2025

**பிரதிவாதி சாட்சி 2 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வழக்குச் சொத்துக்கள் எத்தனை இனம், என்ன புல எண்கள் மற்றும் என்ன அளவுகள் என்ற விவரம் எனக்கு நேரடியாகத் தெரியும். சொத்துக்கள் எப்பொழுது யாரிடம் இருந்து வாங்கப்பட்டது என்ற விவரம் எனக்கு நேரடியாகத் தெரியாது, என் தாத்தா சொல்லி தெரியும். எனக்கு மொத்தம் எத்தனை இனங்கள் என்று தெரியுமா என்றால் ஒரு சில புல எண்கள்தான் ஞாபகம் உள்ளது, மற்றவை ஞாபகம் இல்லை. எத்தனை இன சொத்துக்கள் என்று குறிப்பாக எனக்கு ஞாபகம் இல்லை. எனக்கு ஒவ்வொரு புல எண்ணிற்கும் எவ்வளவு விஸ்தீரணம் என்று ஞாபகம் இல்லை. ஒவ்வொரு இன சொத்திற்கும் நான்கு எல்லைகள் எனக்கு ஞாபகம் இல்லை. 1972ல் பாகப்பிரிவினையின்போது நான் பிறக்கவில்லை. அதனால் எத்தனை இன சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் என்ற எனக்கு தெரியாது என்றால் பாகப்பிரிவினை ஆவணம் மூலம் எனக்குத் தெரியும். சுமார் 2 ஏக்கர் 72 சென்ட் பூர்விக சொத்துக்கள் ஆகும்.

2) நான் கூறும் பாகப்பிரிவினை, என் தாத்தா மற்றும் அவரது சகோதர்களுக்கிடையே ஏற்பட்ட பாகப்பிரிவினை ஆகும். 1ம் பிரதிவாதியும், வாதியும் சேர்ந்து வாங்கிய சொத்துக்கள் பற்றி எனக்கு தெரியாது என்றால் அவர்கள் அவ்வாறு சொத்துக்கள் ஏதும் வாங்கவில்லை. 1981ம் வருடம் என் பாட்டனார் கூட்டுக் குடும்ப தலைவர் என்னும் முறையில் என் தகப்பனாரும், வாதியும் சேர்ந்து 1ம் பிரதிவாதி பெயரில் சொத்துக்களை கிரயம் பெற்றனர் என்றால் சரியல்ல.

அதேபோல் 1986ம் வருடம் 1ம் பிரதிவாதி பெயரில் சொத்துக்கள் கிரயம் பெறப்பட்டது என்றால் சரியல்ல. என் பாட்டனார் 1ம் பிரதிவாதிக்கு பிறவி முதலே ஒரு கண் பார்வை தெரியாது. என் பாட்டனாருக்கு 1ம் பிரதிவாதி, வாதி மற்றும் 6ம் பிரதிவாதி ஆகியோர் வாரிசுகள் ஆவர். 1ம் பிரதிவாதிக்கு பார்வை கிடையாது என்றாலும், அவரது உடல் நிலை காரணமாக அவரால் கிரயம் வாங்க இயலாது என்றாலும், அதனால் வாதியும், 1ம் பிரதிவாதியும் அவர் பெயரில் சொத்துக்களை கிரயம் பெற்றனர் என்றால் சரியல்ல. 6ம் பிரதிவாதிக்கு என் தகப்பானரும், வாதியும் சேர்ந்து நல்ல முறையில் திருமணம் செய்து வைத்தார்கள் என்றால் சரிதான். தற்பொழுது சாட்சி மாற்றி இல்லை என்று கூறுகிறார்.

3) 6ம் பிரதிவாதிக்கு 1989ல் திருமணம் ஆனதாக என்னிடம் கூறினார்கள். 1989ல் நான் பிறக்கவில்லை. அதனால் 6ம் பிரவாதி திருமணம் சம்மந்தமாக எனக்கு நேரடியாகத் தெரியாது என்றால் சரிதான். வழக்குச் சொத்துக்களில் எத்தனை பம்பு செட்டுகள் உள்ளனா என்றால் ஒரே பம்பு செட்டு தான் உள்ளது. அந்த பம்பு செட் புல 198/1 ஏ 3 ல் உள்ளது. வழக்குச் சொத்துக்களை வாதியும், என் தகப்பனாரும் ஒன்றாக பயிர் வைத்தனர் என்றால் சரியல்ல, எனக்கு கருத்து தெரிந்து 1ம் பிரதிவாதிதான் பயிர் வைத்தார். 2015 அல்லது 16 முதல் எனக்கு கருத்து தெரிந்து 1ம் பிரதிவாதி அனுபவித்து வருகிறார். வழக்குச் சொத்துக்களை 1ம் பிரதிவாதியும், வாதியும் தான் ஒன்றாக பயிர் செய்து அனுபவித்து வருகின்றனர் என்றால் சரியல்ல. வழக்குச் சொத்துக்களில் தற்பொழுது நெற்பயிர் வைக்கப்பட்டுள்ளது. அந்த நெற்பயிர்களை வாதிதான் வைத்துள்ளார் என்றால் சரியல்ல, நாங்கள்தான் வைத்துள்ளோம். தற்பொழுது வழக்குச் சொத்துக்களில் குண்டு நெற்பயிர் வைக்கப்பட்டுள்ளது.3 ஏக்கர் அவ்வாறு பயிர் செய்யப்பட்டுள்ளது. அதனை வாதியும் சேர்ந்து தான் பயிர் வைத்துள்ளார் என்றால் சரியல்ல. வாதி தற்பொழுது 1ம் பிரதிவாதி ஒதுக்கிய சொத்துக்களை வைத்து பயிர்

செய்து வருகிறார். வழக்குச் சொத்துக்களை வாதிதான் அனுபவித்து வருகிறார் என்றால்சரியல்ல. வாதியை ஏமாற்றி பொய்யான செட்டில்மென்ட் ஆவணம் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

4) வழக்குச் சொத்துக்களில் வாதிக்கு பங்கு உள்ளது என்றாலும், நாங்கள் கூட்டுச் சதி செய்து தவறான கட்சி செய்து வருகிறோம் என்றாலும் சரியல்ல. முறையாக பாகம் பிரித்திருந்தால் வழி ஏற்பட்டிருக்கும் என்றால் சரியல்ல. கிணறு, மோட்டார் ஆகியவை இதுவரை பொதுவில்தான் உள்ளது என்றால் சரியல்ல. பாகம் பிரிக்கும் பொழுது வாதி அங்கு இல்லை என்றால் சரியல்ல. அனைவரும் ஒன்றாக இருந்து பேசிதான் பாகப்பிரிவினை செய்யப்பட்டது. வாதி எந்த ஒரு ஆவணத்திலும் கையொப்பம் போடவில்லை என்றால் செட்டில்மென்ட் எழுதப்பட்டது என்பதால் கையொப்பம் தேவையில்லை. வாதி அங்கிருந்திருந்தால் சாட்சி கையொப்பம் பெற்றிருப்போம் என்றால் சரியல்ல. என் பெயரில் உள்ள செட்டில்மெண்ட் ஆவணம் வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. வழக்குச் சொத்தை வாதி கூட்டாகத்தான் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் வழக்கிற்கு பின்னிட்டவை என்பதால் வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

5) பி.த.சா.ஆ.1 முதல் 3 ஆவணங்கள் நான் பிறப்பதற்கு முன்பே ஏற்பட்ட ஆவணங்கள் என்பதால் சுயமாக பெறப்பட்ட கிரய ஆவணங்கள் என்று என்னால் சொல்ல இயலாது என்றால் சரியல்ல. பி.த.சா.ஆ.1க்கான அசல் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பி.த.சா.ஆ.5 மற்றும் 6 ஆவணங்களின் அசல் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பி.த.சா.ஆ.7 ஆவணம் வாதியை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல. வழக்குச் சொத்துக்கள் கூட்டுக்குடும்ப சொத்துக்கள் மற்றும் வாதி மற்றும் 1ம் பிரதிவாதி கிரயம் வாங்கிய சொத்துக்கள் என்றாலும், அதை வாதிக்கு தெரியாமல் பாகப்பிரிவினை செய்தது செல்லாது

என்றாலும், வாதிக்கு வழக்குச் சொத்துக்களில் பாகம் உண்டு என்று சொன்னாலும் சரியல்ல. வாதி வழக்கை தீர்ப்பளித்தும், எங்களுடைய வழக்கை தள்ளுபடி செய்யவும் வேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.